விசு அய்யர்
திருவருட்பயன்
மூலமும் உரையும்

நூல் அறிமுகம்

நூலின் பெயர்	:	**திருவருட்பயன்-மூலமும் உரையும்.**
நூல் ஆசிரியர்	:	விசு அய்யர்
எழுத்து	:	11 புள்ளி
முதற் பதிப்பு	:	2025
உரிமை	:	ஆசிரியருக்கு
கணினி அச்சு உதவி	:	மணி பதிப்பகம்
பக்கம்	:	36
மதிப்பு	:	இந்திய ரூபாயில் ரூ.49

என்னுரை

அறியாமை என்பது உயிரின் இயல்பே. இதை தெரியாமல் பலரும் அறியாமை தம்மிடம் இருப்பதை உணர்வாரில்லை. இன்று புதிதாய் பிறந்தோம் என்று பாரதி சொல்வது போல இன்று புதியதாய் கற்றுக் கொண்டோம் என சொல்ல எத்தனை பேருக்கு தைரியம் வரும் சொல்லுங்கள்.

நாம் எந்த துறையில் நிபுணத்துவம் பெற்று இருக்கிறோமோ, அந்த துறையிலேயே தெரியாதன என சில-பல இருக்கத்தான் செய்யும். இது தவறும் அல்ல சரியும் அல்ல. தெரியாதனவற்றை தெரிந்து கொள்வதும் தெரிந்தவற்றை எடுத்து சொல்வதுமே முதிர்ச்சி நிலையின் முதற்படி.

அறியாமை என்பது இருள். அறிவு பெறுதல் என்பது ஒளி என்ற தத்துவப் படி அறியாமையில் இருந்து அறிவு நிலைக்கு செல்வதே வளர்ச்சி. இந்த அறியாமை எல்லா நிலையிலும் இருக்கும் என்பதால் தான் ஔவையார், "கற்றது கை மண் அளவு" என்று சொல்லி இருக்கிறார்.

இந்த படி நிலையில், சைவ சித்தாந்த சாத்திரங்கள் என சொல்லப்படும் மெய் கண்ட சாத்திரத்தில் இருந்து உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த திருவருட் பயன் என்ற நூலின் எளிய உரையை அடியேன் செய்ய முயற்சி செய்துள்ளேன்.

பல பெரிய பெரிய உரை நூல்கள் இருந்தும், உதாரணங்களையும் உவமைகளையும் விளக்கங்களையும் சொல்லாமல் குறளின் பொருளை புரியும்படி சொல்லி உள்ளது. படிக்க நேரமில்லை. நிற்க எனக்கு நேரமில்லை நெடுந்தூரம் செல்ல வேண்டும் என reels அளவு

செய்திகளை எடுத்துக் கொள்ளும் மன நிலைக்கு வந்து விட்டவர்கள் இருப்பதால் இந்த எளிய உரை.

இது சரியா தவறா என்பதை விட பழமையை தொழில் நுட்ப புதுமைக்கு எடுத்துச் சென்றால் தான் பலருக்கும் இது போய் சேரும். அழிந்து விடாமல் பாதுகாக்கப் படும் என்ற கருத்தில் இதை படைத்து உள்ளோம். இதையே digital classroomல் பதிவு செய்து இருக்கிறோம். இது ஒரு legacy mission என்பதால், 14 சாத்திர நூல்களை தொகுத்து digitalised செய்து இருக்கிறோம்.

எனது ஞான ஆசிரியர், திருவாவடுதுறை ஆதினத்தின் நேர்முக பயிற்சி மையத்தின் இயக்குனர், "மெய்ஞான வள்ளல்", "செந்நெறிச் செல்வர்" சிவதிரு கு. **வைத்தியநாத ஈசான தேசிகர்**, அவர்களிடம் 25 ஆண்டுகள் பாடங்களை கேட்டு உள்வாங்கியதை படைத்து தரப்பட்டுள்ளது. ஆன்றோர் பெருமக்கள் பிழைகளை பொறுத்து அன்புடன் சுட்டி காட்டினால் திருத்திக் கொள்ள தயாராக உள்ளோம்.

இந்த நூலினை வழக்கம் போல கணினி அச்சு செய்து புத்தகமாக உருவாக்கி கொடுத்த **மணிபதிப்பகத்தாரு**க்கு நன்றியை பதிவு செய்கிறேன்.

நமது நூல் படைப்பின் வரிசையில் இன்னொரு ,மைல் கல் என்ற ஆவலில் இந்த புத்தகத்தினை வழக்கம் போல வாங்கி படித்து பயன் அடைந்து நூல் ஆசிரியரை ஊக்கப்படுத்த வேண்டுகிறோம்.

இந்த நூல் அமேசான், விக்கி மீடியா மற்றும் மின் நூலகம் போன்ற தளங்களில் கிடைக்கும். channel G என்ற podcastல் ஆடியோவாகவும் கேட்டு பயன்பெறலாம்.

பேரன்புடன்

விசு அய்யர்

iyervisuiyer@gmail.com

பதிப்புரை

இரும்புக் கடலை என்று சொல்லும் சைவ சித்தாந்த சாத்திரங்களை, இன்சுவை தேன் என்பது போல நவீன கால digital உலகிற்கு ஏற்ப திருவருட்பயன் என்ற நூலுக்கு எளிய நடையில் பெரிய பெரிய விளக்கங்கள் உவமைகள் என சொல்லாமல் குறளுக்கான பொருளை தந்து இருப்பது வித்தியாசமாக இருக்கிறது சிறப்பாக இருக்கிறது.

நூல் ஆசிரியர் எதையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறமை படைத்தவர். அவர் தம் படைப்பு திறனை ஒவ்வொரு பதிப்பிலும் பதிப்பாசிரியராக நாங்கள், பார்த்து வியந்து இருக்கிறோம். அந்த வரிசையில், இது மேலும் ஒன்று. அவர் தம் எண்ணங்களிலும் சரி, செயல்களிலும் சரி, தனக்கு என தனி முத்திரை கொண்டு, தனி ஒருவனாக, தன்னை முன் நிறுத்தி காட்டும் வல்லவர். இந்த இருபதாம் நூற்றான்டில், இப்படி கூட ஒருவரா என்று நாங்கள் வியப்பில் ஆழ்ந்தது உண்டு.

இந்த பெருமகனாரின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் நூலக பதிப்பித்து படைத்து தருவதில் பேரின்பம் அடைகிறோம். தொடர்ந்து வரும் அவரது நூல்களையும் தொய்வில்லாமல் தரும் சிந்தனைகளையும் அன்பர்கள் படித்து பயன் பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இந்த நூல்களை படித்து பயன் பெறுவது ஒன்றே நூல் ஆசிரியருக்கு நாம் தரும் ஊக்க மருந்து.

எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் அறிவை பகிரும் இந்த நூல் ஆசிரியர் தம் எண்ணங்களுக்கு பலம் சேர்ப்போம் பயன் பெறுவோம்.

- பதிப்பாளர்

உள்ளடக்கம்

பதி முது நிலை	05
உயிர் அவை நிலை	10
இருள் மல நிலை	13
அருளது நிலை	16
அருள் உரு நிலை	19
அறியும் நெறி	22
உயிர் விளக்கம்	25
இன்புறு நிலை	28
ஐந்தெழுத்து நிலை	30
அணைந்தோர் தன்மை	33

திருவருட்பயன்

காப்புச் செய்யுள் - கணபதி வணக்கம்

நற் குஞ்சரக்கன்று நண்ணில் கலைஞானம்
கற்கும் சரக்கு அன்று காண்

நீர் இருக்கும் இடமெல்லாம் நிலைத்து இருக்கும் விநாயக பெருமானை நினைந்து வழிபடுவார்களுக்கு ஞான சாத்திர நூல்களை கற்பது சுலபமாகும்

1. பதி முது நிலை

அகர உயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து

தனக்கு உவமை இல்லாத தலைவன் அறிவு வடிவமாய் எல்லா பொருள்களிலும் நிறைந்து நிற்கும்.

தன்னிலைமை மன்உயிர்கள் சார தரும் சத்தி
பின்னம் இலான் எங்கள் பிரான்

கடவுளின் திருவருளை எல்லா உயிர்களிடத்தும் சென்று சேர்க்கும் சத்தியிடத்தில் பின்னப்படாது நிற்பவன் இறைவன்

**பெருமைக்கும் நுண்மைக்கும் பேர் அருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பு இன்மை யான்**

அனுவிலும் அண்டத்திலும் கலந்து நிற்கும் கடவுள் ஒப்பு உவமை இல்லாதவன். அவனே மிகப் பெரியவன்

**ஆக்கி எவையும் அளித்து ஆசுடன் அடங்கப்
போக்கும் அவன் போகாப் புகல்.**

படைத்து, காத்து, அழித்து, மறைத்து அருளிப்பாடுகளை செய்யும் இறைவன் சிவபெருமானே.

**அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன் .**

அருவம், உருவம், அருஉருவம், என மூவகை திருமேனிகளை தாங்கி உயிருக்கு உதவுபவன் சிவபெருமானே.

**பல் ஆருயிர் உணரும் பான்மை என மேல் ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை**

அறிவிக்காமல் தானே அறியும் சிவபெருமான், தனக்கு மேல் ஒருவன் இல்லாதவனாகவும், பலவாக உள்ள உயிர்களுக்கு உதவுபவனாகவும் இருப்பவன்.

ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்

தேவர்களாலும் காண முடியாத சிவபெருமான், பேரன்பு கொண்ட அடியவர்களுக்கு வெளிப்பட்டு தோன்றுவான்.

எங்கும் எவையும் எறியுறு நீர் போல் ஏகம்
தங்கும் அவன் தானே தனி

இறைவன் பொருளகளோடு கலந்தும் நிற்பான் கடந்தும் நிற்பான். இதுவே சிவத்தின் முழு நிறைவு (வியாபாகம்)

நலம் இலன் நண்ணார்க்கு நண்ணினார்க்கு நல்லான்
சலமிலன் பேர் சங்கரன்

எல்லா உயிர்களுக்கும் சுகத்தையே செய்யும் சங்கரன் எனும் திருநாமத்தை கொண்ட சிவ பெருமான் தன்னை அடைந்து அன்போடு வழிபடுபவர்களுக்கு இன்பத்தையே தருகிறான்

உன்னும் எது ஐயம் ஈழத்து உணர்வாய் ஓவாது
மண்ணுபவம் தீர்க்கும் மருந்து

ஆணவம் என்ற வியாதியை நீக்கி, ஞானமாய் நின்று திருவருள் எனும் மருத்தை ஊட்டும் வைத்தியன் சிவபெருமான்.

2. உயிர் அவை நிலை

**பிறந்த நாள் மேலும் பிறக்கு நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை**

உயிர்கள் பிறந்து வாழ்ந்த நாட்களையோ இனிமேல் பிறக்கப் போகும் நாட்களையோ எண்ணி சொல்ல முடியாதது போல முத்தி அடைந்த உயிர்களை எண்ணிச் சொல்ல முடியாது.

**திரிமலத்தார் ஒன்று அதனில் சென்றார்கள் அன்றி
ஒரு மலத்தார் ஆயும் உளர் .**

ஆன்மாக்கள் மூவகை உண்டு. ஆணவம் கன்மம், மாயை என மும்மலங்களை உடையவார்கள் சகலர், ஆணவம் கன்மம் என இரு மலங்களை உடையவர்கள் பிரலாயாகலர் ஆணவமலம் மட்டும் உடையவர்கள் விஞ்ஞானகலர்.

**மூன்று திறத்து உள்ளாறும் மூல மலத்து உள்ளார்கள்
தோன்றளர் தொத்துளார் துணை**

ஆன்மாக்கள், மலத்தோடு பிணைக்கப்பட்டு இருந்தாலும், சகலர் வகை ஆன்மாக்களுக்கு தாம் மலத்தோடு பிணைக்கப்பட்டு இருக்கிறோம் என்பதை அறிய மாட்டாதவர்கள்.

கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும்
திண் திறலுக்கு என்னோ செயல்

கனவும் நனவும் ஒரு போதும் ஒன்றாக இருப்பதில்லை. இப்படி சுதந்திரமாக இருக்கும் உணர்வு இல்லாதது ஆன்மா.

பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
“அறிவு” என்று பேர் நன்று அற.

ஆன்மா அறிவுடைய பொருள் என்று சொல்கிறோம். ஆனால், கருவிகள் உதவி இல்லாமல் பொருள்களை அறியமுடியாது.

ஒளியும் இருளும் உலகும் அலர் கண்
தெளிவு இல் எனில் என் செய

அறிவு விருப்பம் செயல் இருந்தாலே அவை உயிர். இம்மூன்றும், இருந்தால் தான் ஆனவத்தைச்சாரும் போது மயக்கத்தையும், சிவத்தைச் சாரும் போது அருளையும் பெறும்.

சத்து அசத்தைச் சாராது அசத்து அறியாது அங்கண் இவை
உய்தல் சத சாத்தாம் உயிர்.

அறிவுள்ள பொருள் அறிவில்லாதவனவற்றை சாராது. அறிவில்லாத பொருள் எதையும் அறியாது. அறிவித்தால் அறியும் உயிர் இரண்டையும் அறிவதால் அது சதசத்து எனப்படும்.

**இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்லாம்
பொருள்கள் இலதோ புவி**

ஆணவமல பற்றில் இருக்கும் போது, அறியாமையிலும், அறிவு விளக்கம் பெற்று, திருவருள் பிடிப்பில் இருக்கும் போது, ஒளி பெற்றும் சார்ந்த அதன் தன்மையை பெற்று விளங்குவது உயிர்.

**ஊமன் கண் போல ஒளியும் மிக இருளே
யாம்மன் கண் காணாதவை**

எங்கும் சிவம் இருந்தாலும், ஆணவ மல மறைப்பினால் உயிர்களுக்கு சிவம் தெரிவதில்லை.

**அன்றளவும் ஆற்றும் உயிர் அந்தோ அருள் தெரிவது
என்று அளவு ஒன்று இல்லா இடர்**

முயற்சி இல்லாமல் வெற்றி இல்லை. பிறந்து இறந்து துன்புறும் ஆன்மாக்கள் துன்பத்தில் இருந்து விடுபட விதித்த அறத்தின் படி, வாழ முயற்சி எடுக்க வேண்டும்.

3. இருள் மல நிலை

துன்றும் பவத்து உயரும் இன்பும் துணைப் பொருளும்
இன்று என்பது எவ்வாறும் இல்.

பிறவி இல்லை. முத்தி இல்லை. துன்பத்திற்கு காரணமான மும்மலங்கள் இல்லை என எந்த அடிப்படையிலும் சொல்ல முடியாது. எனவே அதுவே அறியாமை.

இருளானது அன்றி ஈழத்து எவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்

இருட்டில் இருக்கும் பொருள், தானே மறைவதில்லை. அதை இருட்டு மறைத்து இருக்கும். அது போல ஆணவமலத்தில் இருக்கும் உயிரின் தன்மையை ஆணவமலம் மறைத்து நிற்கும்.

ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது

புற இருளானது, பொருளை மறைக்கும். தான் இருட்டு என தன்னை கட்டும். ஆனால், ஆணவமலம் என அக இருளானது, தன்னையும் காட்டாது, தான் மறைத்த பொருளையும் காட்டாது.

அன்றளவி உள் வலியோடு ஆவி இடையடங்கி
இன்றளவும் நின்றது இருள்

அநாதியே ஆன்மாவோடு கலந்துள்ள ஆணவமலம், உள் ஒளியான சிவஞானத்தோடு சேர விடாமல் ஆன்மாவை தடுத்துக் கொண்டு இருக்கிறது.

பலரை புணர்ந்தும் இருட் பாவைக்கு உண்டு என்றும்
கணவர்க்கும் தோன்றாத கற்பு

பல ஆன்மாக்களோடு சேர்ந்து இருக்கும் ஆணவ மலம், ஒரு ஆன்மாவுக்குக் கூட தன் இயல்பு நிலையை காட்டுவதில்லை.

பன்மொழிகள் என் உணரும் பான்மை தெரியாத
தன்மை இருளார் தந்தது

நமது அறியாமைக்கு என்ன காரணம் என பேசி பயன் இல்லை. காரணம் தன்னை, தன் வினையை, தலைவனை என எதையுமே அறியாவிடாமல் செய்வது ஆணவமலமே ஆகும்.

இருள் இன்றேல் துன்பு என் உயிர் இயல்பேல் போக்கும்
பொருள் உண்டேல் ஒன்றாகப் போம்.

உயிருக்கு பிறவி துன்பத்திற்கு காரணம் ஆணவ மலமே. ஆணவமலம் ஆன்மாவின் குணம் அல்ல. அறிவை விளங்க விடாமல் செய்யும் அதனால் உயிர்களுக்கு துன்பம்.

ஆசாதி யேல் அணைவ காரணம் என் முத்தி நிலை
பேசாது கவ்வும் பிணி

ஆணவமலம் இடையில் வந்து சேர்ந்தது இல்லை. ஆதி முதலே உயிரோடு ஆணவமலம் இருக்கும். அந்த உயிர் மலத்தை பற்றி இருக்கும்.

ஒன்று மிகினும் ஒளிகவராதேல் உள்ளம்
என்றும் அகலாது இருள்

ஆணவமல மறைப்பினால் உயிருக்கு ஏற்பட்ட அறியாமையை போக்கும் பொருட்டே இறைவன் உயிருக்கு பிறவி வாய்ப்பை தந்து உள்ளான் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு மலத்தில் இருந்து விடுபட ஆன்மா முயற்சிக்க வேண்டும். இதுவே ஆன்மசாதனை

விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து

விடியும் வரை இருளை நீக்க எரியும் விளக்கு உதவுகிறது. அதுபோல, ஆணவமல இருளில் இருந்து நீங்கி இருக்க மாயை கன்மம் உதவுகிறது. அதையும் விலக்கி பேரொளியில் இணைய வேண்டும்.

4. அருளது நிலை

அருளில் பெரியது அகிலத்தில் வேண்டும்
பொருளில் தலை ஈழத்து போல்

திருவருளை விட பெரிய பொருள் எதுவும் இல்லை. பொருள் உலகில் பெரியது என கருதுவதை விட பெரியது இந்த திருவருளே ஆகும்.

பெருக்க நுகர்வினை பேரொளியாய் எங்கும்
அருக்கன் என நிற்கும் அருள்

ஆன்மாவின் அறிவு ஒளிர, உடல் உலகு முதலியவற்றை படைத்து, அவைகளை உயிர்கள் அனுபவிக்கும்படி செய்து ஆணவமலத்தை குறைத்து, திருவருள் ஒரே நிலையில் விரிந்துள்ளது.

ஊன் அறியாது ஒன்றும் உயிர் அறியாது ஒன்றும் இவை
தானறியாது ஆரறிவார் தான்

உடல் அறிவற்ற பொருள் இதனால் உயிருக்கு அறிவிக்க முடியாது. ஆணவமலத்தினால் மூடப்பட்ட உயிர் தானாக அறியாது. ஆக இந்த உயிருக்கு அறிவு விளக்கம் செய்வது திருவருளே ஆகும்.

பால் ஆழி மீன் ஆளும் பான்மைத்து அருள் உயிர்கள்
மால் ஆழி ஆழு மறுத்து

உயிர்கள் அருள் கடலில் இருந்தாலும், பொருள் உலகத்தில் உழன்று பிறவி துயருக்குள் வீழும். இறைப் பற்றை பெற பற்றட்டான் பற்றினை பற்ற வேண்டும்.

அணுகு துணை அறியா ஆற்றோனில் ஐந்தும்
உணர்வை உணரா உயிர்

உயிர்களுக்கு தோன்றா துணையாக விளங்கும் இறைவனை ஆன்மா உணர்வது இல்லை.

தரையை அறியாது தாமே திரிவோர்
புரையை உணரார் புவி

தம்மை தாங்கி நிற்பது பூமி என அறியாமல் தாமே தம்மை தாங்கி இருப்பதாக நினைப்பது போல, திருவருளை உணராமல், தாமே எல்லாம் சாதிப்பதாக நினைப்பதே ஆணவம்.

மலை கெடுத்தோர் மண் கெடுத்தோர் வான் கெடுத்தோர் ஞானம்
தலை கெடுத்தோர் தற்கேடர் தாம்

ஞானமாகிய திருவருளில் இருந்து கொண்டே ஞானத்தை தேடுவது அருளின் நிலையை அறியாமை ஆகும்.

வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன்

ஆன்மா புலன்களோடு ஒன்றி தன்னையே தலைவன் என வியந்து கொள்வது, அருள்அது நிலையை உணராமையே ஆகும்.

பரப்பு அமைந்து கேண்மின் இது பாற்கலன் மேல் பூனை
கரப்பு அருந்த நாடும் கடன்

மனதில் பரபரப்பு இல்லாமல் ஞான நூல்களை கேட்க வேண்டும். இதில் தவறினால், சிந்தனை மாறுபட்டு அறிவை ஆணவம் மறைக்கும்.

இற்றை வரை இயைந்தும் ஏதும் பழக்கம் இலா
வெற்று உயிர்க்கு வீடு மிகை

ஆன்மா திருவருளோடு இருந்தும் திருவருளை அறியாமைக்கு காரணம், ஆணவகாரியமாகிய அஞ்ஞானமே. அந்த அறியாமையை நீக்கும் பொருட்டே திருவருள் உதவுகிறது. அதை உணராமல் வீடு பெற முடியாது.

5. அருள் உரு நிலை

அறியாமை உள் நின்று அழித்ததே காணும்
குறியாக நீங்காத கோ

அறியாமை கொண்ட ஆன்மாவை உள் நின்று ஊட்டி வளர்த்த திருவருளே குரு வடிவம் தாங்கி வந்து ஞானம் அருளும். அருள் உரு நிலை பெற்று உதவும்.

அகத்து உறு நோய்க்கு உள்ளினார் அன்றி அதனைச்
அகத்தவரும் காண்பரோ தான்

ஆன்மாவை பற்றியுள்ள ஆணவமாகிய நோயை, ஆன்மாவோடு கலந்து நிற்கும் திருவருளே அறியும். அந்த அருள் குருவாக வந்து பிணி நீக்கம் செய்தாலன்றி நோய் நீங்காது.

அருளா வகையால் அருள் புரிய வந்த
பொருள் ஆர் அறிவார் புவி

குரு வடிவில் வந்து அருள் புரியும் திருவருளை பக்குவம் வாய்ந்த ஆன்மாக்களை தவிர வேறு ஒருவரால் அறியமுடியுமோ. (முடியாது)

பொய் இருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்
மெய் இரண்டும் காணார் மிக.

ஆணவ இருளில் அகப்பட்ட ஆன்மாக்கள், உலக இன்பத்திலேயே கருத்து உடையவராய் குரு வாகிய திருமேனியை உரியவாறு காணமாட்டார்.

பார்வை என மாக்களைப் பற்றிப் படித்தற்காம்
போர்வை எனக் காணார் புவி

பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்கு ஞான உபதேசம் செய்ய மானுட சட்டை தாங்கி வந்து அருள்பவன் இறைவன். பக்குவம் இல்லாதவர்கள் இதனை அறிய மாட்டார்கள்.

எமக்கு என் எவனுக்கு எவை தெரியும் அவ்வத்
தமக்கு அவனை வேண்டத் தவிர்

குருவினால் எனக்கு என்ன பயன் என கேட்காமல், ஞான பொருள்களை உள்ளபடியே உணர்ந்து இருப்பவர்களை பக்குவம் உடைய ஆன்மாக்கள் குருவாக உணரும்.

விடயம் நகுலம் மேவினும் மெய்ப் பாவகனின் மீளும்
கடனில் இருள் போவது இவன் கண்.

தன்னை சிவமாக பாவித்து அருள் உபதேசம் செய்யும் பக்குவம் உடைய ஆன்மாக்கள் ஆணவமலத்தில் இருந்து விடுபடும்.

அகலத் தரும் அருளை ஆக்கும் வினை நீக்கும்
சகலர்க்கு வந்து அருளும் தான்

மூவகை ஆன்மாக்களுக்கு வினை நீக்கும் வகையை சொல்கிறது. அறிவில் நின்று ஒரு மலம் உடைய விஞ்ஞானகலருக்கும், எதிரில் தோன்றி இருமலம் உடைய பிரலாயகலருக்கும் குருவாக வந்து மும்மலம் உடைய சகலருக்கும் வினை நீக்கம் செய்வான்.

ஆர் அறிவார் எல்லாம் அகன்ற நெறி அருளும்
பேரறிவாளன் வாராத பின்

தத்துவங்களை கடந்த சிவ பெருமான் ஒருவனே உயிர்களுக்கு முத்தி அளிக்க முடியும்.

ஞானம் இவன் ஒழிய நண்ணியிடும் நற்கல் அனல்
பானு ஒழியப் படின்

திருவருள் வடிவாகிய குருவினால் மட்டுமே ஞானம் தோன்றும்.

6. அறியும் நெறி

நீடும் இருவினையும் நேராக நேராதல்
கூடும் இறை சத்தி கொளல்

பிறவி நல்வினையாலும் உண்டு. தீவினையாலும் உண்டு. விருப்பும் வெறுப்பும் இன்றி சமமாக காணும் நிலை(இருவினை ஒப்பு)யில் தான் இறைவனின் அருள் சக்தி (சத்திநிபாதம்) கூடும்.

ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை இரண்டு
ஆக இவை ஆறு ஆதி இல்

அனாதியான பொருள்கள் ஆறு. இறைவன், உயிர்கள் ஆணவம் கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை.

செய்வானும் செய்வினையும் சேர் பயனும் சேரப் பவனும்
உய்வான் உளன் என்று உணர்

ஆன்மாவை மலத்தில்இருந்து நீக்கும் பொருள்- ஆன்மா, வினை, வினைப்பயன் இறைவன் என்பன.

ஊன் உயிரால் வாழும் ஒருமைத்தே ஊனோடு உயிர்
தான் உணர்வோடு ஒன்றாம் தரம்

உடலுக்குள் உயிர் உள்ளதை உடல் உணர்வதில்லை. ஆன்மாவுக்குள் சிவம் உள்ளதை உயிர் உணர்வதில்லை.

தன் நிறமும் பல் நிறமும் தானாம் கல் தன்மை தரும்
பொன் நிறம் போன் மன் நிறம் இப் பூ.

ஆன்மாவை இரட்சிக்கும் இறைவன் அந்த அந்த ஆன்மாவுக்கு ஏற்றார் போல அருள் செய்து அத்தனையும் கடந்து நிற்பர்.

கண் தொல்லை காணும் நெறி கண் உயிர் நாப்பண் நிலை
உண்டிலை அல்லது ஒளி

இறைவனுக்கும், உயிர்க்கும் நடுவே திருவருள் துணையாகிய ஞானம் இருந்தால் ஒழிய ஆன்மா கடவுளை காண முடியாது.

புன் செயலி னோடும் புலன் செயல் போல் நின் செயலை
மண் செயல் அதாக மதி

ஆன்மாவின் செயல்கள் தன் செயலாக நினைத்தால் ஆகாமியம் (வருவினை)கூடும் அதனை சிவன் செயலாக நினைத்தால் பாச சம்பந்தம் இல்லாமல் ஆகாமியமாவது இல்லை.

ஓராதே ஒன்றையும் உற்று உண்ணாதே நீ முந்திப்
பாராதே பார்த்தனைப் பார்

உலக பொருள்களை போல ஞானம் எப்படி வரும் என்று ஆராய்ச்சி செய்ய தேவையில்லை. உயிர் பக்குவம் அடையும் போது அது தானாக வரும். அப்போது அதை உணரலாம்.

களியே மிகு புல மாய்க்கருதி ஞான
ஒளியே ஒளியா ஒளி

தண்ணீருக்குள் இருப்பவருக்கு வெளியில் உள்ள பொருள் தெரியாது போல, ஞானத்துள் மூழ்கி இருப்பவருக்கு உலக பொருள் தோன்றாது.

கண்டபடியே கண்டு காணாமை காணாமல்
கொண்டபடியே கொண்டு இரு

அறியாமை வசப்படாமல், ஞானம் கூடியதும், ஞானதிலேயே இருப்பாயாக.

7. உயிர் விளக்கம்

தூ நிழல் ஆர்தற்கும் ஆரும் சொல்லார் தொகும் இது போல்
தான் அத்துவாய் நிற்கும் தரம்

மலமாயைகளில் துன்புற்றவன், இருவினை ஒப்பு வந்த வேளையில் இன்புறுவது இயல்பு.

தித்திக்கும் பால் தானும் கைக்கும் திருந்திடும் நாப்
பித்தத்தில் தான் தவிர்ந்த பின்

அறியாமை தரும் ஆணவமலம் துன்பம் தரும். (மறைப்பாற்றல்) ஆணவம் நீங்கியதும் இன்பத்தை தரும் (அருலாற்றல்)

காண்பான் ஒளி இருளில் காட்டிடவும் தான் கண்ட
வீண் பாவம் எந்நாள் விடும்

ஆணவமலத்தால் அறியாமையில் உள்ள ஆன்மாவுக்கு திருவருளே துணை செய்து ஞானத்தை காட்டுகிறது. ஆனால், ஆன்மா தானே கண்டதாக நினைக்கிறது. இதுவே மீண்டும் பிறவிக்கு ஏதுவாகும்.

ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்

அருள் சிவத்தை காட்டி உலகை மறைக்கும். ஆணவம் உலகை காட்டி சிவத்தை மறைக்கும். தெளிவின்மையில் இருந்து தெளிவை நோக்கி நகர வேண்டும்.

கிடைக்கத் தகுமோ நல் கேண்மையார்க்கு அல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று

தன்னை அடைந்தார்களின் வினைகளையும் வினைப்பயன் களையும் தீர்த்து அருள்வது சிவபெருமானின் கடமை யாகும். திருவருளை சார்ந்து இருப்பவர்களுக்கு வினை களை சுமக்க கடவுள் எளிதில் தோன்றுவான்.

வஞ்சமுடன் ஒருவன் வைத்த நிதி கவரத்
துஞ்சினனோ போயினனோ சொல்

திருவருளின் வழியில் நின்று ஒழுகினால் அன்றி வேறு எந்த வழியாலும் பேரின்பத்தை பெற முடியாது.

தனக்கு நிழல் இன்றாம் ஒளி வரும் தம்பம்
எனக்கவா நில்லாது இருள்

திருவருள் ஆன்மாவை வசப்படுத்தும் போது, ஆணவமல இருள் தோன்றாது. எல்லாம் சிவமாய் தோன்றும்.

உற்கை தரும் பொற்கை உடையவர் போல் உண்மைப்பின்
நிற்கை அருளார் நிலை

சிவத்தை காண அருளை முன் நிறுத்தி தாம் பின்னே நிற்க வேண்டும். திருவருள் இன்றி, தன் அறிவை கொண்டு சிவத்தை காண முடியாது.

ஐம்புலனால் தான் கண்டது அன்றாள் அது ஒழிய
ஐம்புலன் ஆர் தாம் ஆர் அதற்கு

சிவத்தை அறிய முடியுமா? - முடியும். ஐம்புலன்களால் அல்ல, திருவருளால் மட்டுமே முடியும். சிவ பெருமான் பொறி புலன்களை கடந்து நிற்பவன்.

தாமே தரும் அவரைத் தம் வழியினால் கருத்தால்
ஆமே இவர் ஆர் அதற்கு

விளையாட்டு போட்டியில் பதக்கம் கிடைத்தால் பதக்கத்தை பெறத்தான் முடியும் எடுத்துக் கொள்ள முடியாது. திருவருள் ஆன்மாவுக்கு பேரின்பத்தை தருவது, திருவருளால் அன்றி உயிர் பெற்றதாகாது.

8. இன்புறு நிலை

இன்புறுவார் துன்பார் இருளின் எழும் சுடரின்
பின் புகுவார் முன் புகுவார் பின்

இருளை கடக்கும் முயற்சியில், விளக்கை முன் வைத்து நடந்தால் பாதை தெளிவாகும். பின் வைத்து நடந்தால் இருளே வழி காட்டும். தம்மை மறந்து திருவருளை நினைந்து இருப்பவரே பேரானந்தம் அடைவர்.

இருவர் மடந்தையாருக்கு என் பயன் இன்புண்டாம்
ஒருவன் ஒருத்தி உறின்

உயிர் சிவனோடு சேர்வதே பயனுடையதாகும். ஜீவன் சிவமாக வேண்டும்.

இன்பு அதனை எய்துவார்க்கு ஈயும் அவற்கு உருவம்
இன்பதனம் ஆதலினால் இல்

குறைவில்லா நிறைவுடைய இறைவன், தன்னை அடைந்தவருக்கு பேரின்பத்தை அள்ளித் தருவான். அந்த ஆனந்தத்தை அனுபவிக்கும் ஆன்மாக்களிடம் இருந்து அவன் ஆனந்தம் அடைவதில்லை.

தாடலை போல் கூடி அவை தான் நிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகம் எனக் கொள்

சிவனும் சீவனும் சேர்ந்து ஏகமாக நிற்க வேண்டும். இதனை அத்துவிதம் என்க . இரண்டல்ல ஒன்று.

ஒன்றாலும் ஒன்றாது இறந்தாலும் ஓசை எழாது
என்றால் ஒன்று அன்று இரண்டும் இல்

முத்தி நிலையில் ஆன்மா சிவத்தில் கலக்கும் போது, சிவத்திற்கு வேறு அற நின்று சிவத்துக்கு அடியமையாக நிற்கும். பெத்தத்தில் ஆன்மா ஆணவத்தை சார்ந்தும் முத்தத்தில் சிவத்தை சார்ந்து சிவமாய் நிற்கும்.

ஊற்றாரும் பெற்றாரும் ஓவாது உரை ஒழியப்
பற்றாரும் அற்றார் பவம்

சிவ ஆகமங்களில் சொல்லப்பட்ட நெறி முறைகளை கடைப்பிடித்து ஒழுகுபவர்களுக்கு மறு பிறப்பு இல்லை.

பேய் ஒன்றும் தன்மை பிறக்கும் அளவும் இனி
நீ ஒன்றும் செய்யாது நில்.

சிவானுபூதி பெற்றவன், அறிவும் தொழிலும் இன்றி சிவமாய் நிற்பான். இது சீவசமாதி .

ஒண் பொருள்கண் உற்றார்க்கு உறு பயனே அல்லாது
காண்படுப் போர் கைப் பொருள் காண்

ஞானம் பெற்றவர்களுக்கு ஞான பயிற்சிகளே இன்பம். தானாகவே ஞானிகளுக்கு சமய ஆச்சாரங்கள் விலகி விடும்.

மூன்றாய தன்மை அவர் தம்மீன் மிக முயங்கித்
தோன்றாத இன்பம் என் சொல்.

முத்தி நிலையில் ஆன்மா சிவத்தை காணும் போது, காண்பவன், காட்சி, காட்சிப் பொருள்((ஞாதுரு, நேயம், ஞானம்) என தோன்றாத பேரின்பமே ஆகும்.

இன்பில் இனிது என்றல் இன்று உண்டேல் இன்று உண்டாம்
அன்பு நிலையே அது.

இன்பங்களில் சிறந்தது முத்தி இன்பமே. அது அன்பு மிகுந்தவரிடத்தில் அருள் நிறைந்து இருக்கும், அதனால் அது முளைத்து நிற்கும்.

9. ஐந்தெழுத்து அருள் நிலை

அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள் நூல் தெரியப் புகின்

ஆகமும், வேதமும், உபாகமும் ஐந்தெழுத்தின் பொருளையே உணர்த்துகின்றன.

இறை சத்தி பாசம் எழில் மாயை ஆவி
உற நிற்கும் ஓங்காரத்து உள்

சிவம் திருவருள், மலம், மறைப்பாற்றல்(திரோதான சத்தி), ஆன்மா, இவ் ஐந்தும் ஓங்காரத்தில் பொருந்தி நிற்கும்

ஊன நடனம் ஒரு பால் ஒரு பாலாம்
ஞான நடம் தான் நடுவே நாடு

ஆன்மாவிற்கு பிறப்பை தரும் திரோதானமும், முத்தியை தரும் சிவமும் சத்தியுமாக ஆன்மாவுக்கு இருபுறமும் இருந்து ஊண நடனமும், ஞான நடனமும் செய்கிறது. ("சிவ" - ஞான நடனம் "ய"-ஆன்மா; "நம" - ஊன நடனம்)

விரியமந மேவி யவ்வை மீளவிடா சித்தம்
பெரியாவினை தீரில் பெறும்.

திரோதான சத்தி, மலத்தை சார மலம் முயற்சி செய்ய ஆன்மாவை அவ்விரண்டும் பிறவியில் அழுத்தும். இது பெத்த நிலை. ஆன்மாக்கள் தம்முடைய திருவருட் சத்தியின் முயற்சியால் சிவத்தை அடையும். இது முத்தி நிலை. இவ்விரண்டும் ஐந்தெழுத்தில் உள்ளன.

மாலார் திரோதம் மலமுதலாய் மாறுமோ
மேலாக மீளா விடின்

எண்ணுவதையே அடைவோம் என்பதாலே பிறவியில் அழுத்தும் திரோதானத்தை (நம) முன்வைத்து ஓதினால் பிறவி கிட்டும். சிவத்தை முன்நிறுத்தி ஓத வேண்டும் என புரிந்து கொள்ள வேண்டும்.

ஆராதி ஆதாரம் அந்தோ அது மீண்டு
பாராது மேல் ஓதும் பற்று

முத்தியை வேண்டுபவர்கள் “சிவாயநம” என ஓதுக. “நமசிவாய” மீண்டும் பிறவியை ஏற்படுத்தும்.

சிவமுதலே ஆமாறு சேரு மேல் தீரும்
பவம் இது நீ ஓதும் படி

ஜபிக்கும் போது, சிவத்தை முன்நிறுத்தி ஓதினால் ஆணவத்தை வலி குன்ற செய்து, ஆன்மாவை இறையோடு சேர்க்கும் சாதானமாகும். முத்தி கிடைக்கும்.

வாசி அருளி அவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமுமாம் அங்கு

முத்தி நிலையில் ஆன்மாவுக்குளந்த உடலும் கிடையாது. ஆயினும் ஆன்மா திருவருளையே மேனியாக கொண்டு இருக்கும்.

ஆசில் நவா நாப்பண் அடையாது அருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு.

"சிவாயநம" வீடு பேறு என்னும் முத்தியை தரும். முத்தி நிலை வேண்டுவோர் இப்படியே ஓதி பழகுக. ("ந"- திரோதானம் "வ"- சிற்சத்தி "ய"-ஆன்மா)

எல்லா வகையும் இயல்பும் இவன் அகன்று
நில்லா வகையை நினைந்து

வேதாகமங்களின் சொல்லப்பட்ட விதிப்படி வாழ்வதுடன், திருவருளின் துணையும் அமையும் போது, முத்தி கிட்டும்.

10. அணைந்தோர் தன்மை

ஓங்கு உணர்வில் உள்ளடங்கி உள்ளத்துள் இன்பு ஒடுங்கத்
தூங்குவர் மற்றேது உண்டு சொல்

சீவன் முத்தர்கள், உலகிய வாழ்க்கையில் உழலாமல், திருவருளில் மூழ்கி ஞானத்துள் அமிழ்ந்து இருப்பர்.

ஐந்தொழில் காரர்களாம் தொழிலும் போக நுகர்
வெந்தொழிலும் மேவார் மிக.

பதிக்குரிய ஐந்தொழில்களையோ, பசுக்களுக்கு உரிய ஆகாமிய கன்மங்களையோ செய்யார். சிவானந்தத் திலேயே இருப்பர் சீவன் முத்தார்கள்.

எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கு இவர் ஒன்று
அல்லாது அறியார் அற

எல்லாவற்றையும் அறியும் ஞானம் கை வந்த பின்னும் சீவன் முத்தார்கள் ஞானம் ஒன்றைத் தவிர வேறு எதையுமே அறிய மாட்டார்கள்.

புலன் அடக்கித் தம் முதற் கண் புக்குவார் போதார்
தலன் நடக்கும் ஆமை தக

பொறி புலன்களை ஒடுக்கி சிவத்தில் பொருந்தி நிற்பர். சீவன் முத்தர்கள் இவ்வுலக விடயங்களில் தலையிட மாட்டார்கள்.

அவனை அகன்று எங்கு இன்றாம் ஆங்கவனாம் எங்கும்
இவனை ஒழிந்து உண்டாதல் இல்

சிவமாம் தன்மை பெற்ற சீவன் முத்தர்கள் ஆணவ மல சார்பாய் அறவே விட்டவர்கள். அவர்கள் முழு நிறைவு உடையவர்கள்.

உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியருக்கு
எள்ளும் திறம் ஏதும் இல்

சீவன் முத்தார்களுக்கு எல்லா பொருள்களும் சிவமாய் தோன்றும். எந்த பொருள்களையும் இகழ்வதும் இல்லை புகழ்வதும் இல்லை.

உறுந்தொழிற்குத் தக்க பயன் உலகம் தத்தம்
வருந்தொழிற்கு வாய்மை பயன்

செருக்குருமாறு செய்யும் தொழில் எதற்கும் துன்பம் உடைய உலக வாழ்வே பயனாகும். பற்று இன்றி செய்யும் செயலுக்கு பயன் முத்தியை ஆகும்.

ஏன்ற வினை உடலோடு ஏகும் இடையேறும் வினை
தோன்றில் அருளே சுடும்.

சீவன் முத்தர்களுக்கு ஊழ் உடலால் கழியும். அவர்கள் உடல் நீங்கும் போது, வினைகள் தாமே மறையும். மற்ற வினைகளை அருளே சுட்டு அழித்து விடும்.

மும்மை தரும் வினைகள் மூளாவாம் மூதறிவார்க்கு
அம்மையும் இம்மையே யாம்

இம்மை மறுமை அம்மை என்னும் மூவகை வினைகள் இல்லை. சீவன் முத்தர்களுக்கு சரீரம் இருக்கையிலேயே முத்தி உண்டாகும்.

கள்ளத் தலைவர் துயர் கருதித் தங்கருணை
வெள்ளத்து அலைவர் மிக

சிவபெருமான் உயிர்களிடத்து இரக்கம் காட்டுவது போல, சீவன் முத்தர்கள் தம் கருணை வெள்ளத்தால் ஆன்மாக்கள் படும் துன்பத்தை போக்க எங்கும் அருளை வெளிப் படுத்துவார்.

ஆசிரியரின்

மக்கள் மனம் கவர்ந்த பிற நூல்கள்.



குறிப்புகளுக்காக..

குறிப்புகளுக்காக..

ஆசிரியர் குறிப்பு

விசு அய்யர், தமிழ்நாட்டில் உள்ள வீரம் செறிந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்தில், சிவகெங்கை சீமையில் இந்துக்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நன்னாளில், இன்று உலக எழுத்தறிவு தினமாக கொண்டாடப்படும் தினத்தில் தோன்றியவர்.

வரி சட்டத்தில் முதுகலை பட்டயம் பெற்றவர். பள்ளி நாள் முதல் தொடர்ந்து சிறந்த மாணவனாக தேர்ந்து எடுக்கப்பட்ட இவர் இந்திய அளவிலான நினைவு திறன் போட்டியில் பரிசு பெற்றவர். தேசிய அளவிலான அதிவேக தட்டச்சு போட்டியில் வெற்றி பெற்றவர். “சித்தாந்த ரத்னா”, “திருவருட் செல்வர்”, “கைரேகை கலைஞன்” போன்ற இவர் பெற்ற பாராட்டுக்களும் நன்மதிப்பும் பெருமைக்கு உரியன.

இன்று வரை உண்மையான பிரம்மச்சரிய வாழ்க்கையில், உணவிலும், உணர்விலும் இயற்கையோடு இனைந்து வாழும் சீரிய ஒழுக்கத்தை கொண்டவர். பெரியபுராணம், திருக்குறள், மற்றும் சைவ திருமுறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் சமய இலக்கியங்களில் பல ஆய்வு கட்டுரைகளை பதிப்பித்து உள்ளார்.

பன்முக திறமை கொண்ட இவர் எழுதிய சோதிட புத்தகங்களும் வார இதழில் எழுதும் தொடர் கட்டுரைகளும் வாசகர்கள் நெஞ்சத்தை கிள்ளி செல்லும். இவருக்கு என்றே ஒரு வாசகர் கூட்டம் இவரை சுற்றி தொடரும்.

சென்னை அரிமா சங்கம், சென்னை சுழற் சங்கம், அறிதுயில் சங்கம் மற்றும் குடும்ப நற்பணி மன்றம் போன்ற பல இடங்களில் பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தி உள்ளார்.

உடலாலும் உள்ளத்தாலும் சீரிய ஒழுக்கத்தினாலே இன்றும் சொல்லிலும் செயலிலும் இளைஞனாகவே இருக்கின்றார். சொந்த வாழ்க்கையில் மட்டுமின்றி, நடைமுறை வாழ்க்கையிலும் ஒரு ஒழுக்க முறையினை செயல்படுத்தும் இவர் கையில் திருக்குறளும், பையில் திருநீறும், மெய்யில் உருத்திராக்கமும் இருக்கும் என்பதே இவரின் எளிய அடையாளம்.